DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரிச்சாமி | Father/Husband Name : குருசாமி |
| Age : 60 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4 Mar 2026 11:47

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் ஓ.மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஓ.மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண் 928/2 ல் உள்ள 3 ஏக்கர் 25 செண்ட் நிலம் என்னுடைய சித்தப்பா ராமகிருஷ்ணன் என்பவரின் பாதுகாப்பில் இருந்தது. என்னுடைய சித்தப்பா ராமகிருஷ்ணன் ஊராட்சி துறையில் வெளியூர்களில் வேலை செய்து வந்ததால் அந்த நிலத்தை 40 ஆண்டுகளாக நான் தான் பராமரித்து வந்தேன். என்னுடைய சித்தப்பாவின் வாரிசுகளும் பணி நிமித்தமாக வெளியூரில் வசித்து வந்தார்கள். மேற்படி சொத்து என்னுடைய சித்தப்பாவின் தாத்தா பெருமாள்சாமி நாயக்கர் என்பவருக்கு 1923 ம் ஆண்டு பாத்தியப்பட்டதாகும். பெருமாள்சாமி நாயக்கருக்கு பிறகு அவருடைய மகன் ராமசுப்பு நாயக்கர் அனுபவித்து வந்தார்.

2. 06.12.1973 ம் தேதியிலிருந்து அந்த சொத்து என்னுடைய சித்தப்பா ராமகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. என்னுடைய சித்தாப்பாவிடமிருந்து எங்கள் ஊரை சேர்ந்த கந்தசாமி படையாச்சி மகன்கள் வைரமுத்து, குருசாமி மற்றும் பெருமாள் படையாச்சி மகன் ராமர் ஆகியோர் விவசாயத்திற்கு கேட்டார்கள். 1984 ம் ஆண்டு நிலஉடமை மேம்பாட்டு திட்டம் வந்தபோது மேற்படி 3 நபர்களும் என்னுடைய சித்தப்பாவின் நிலத்தில் விவசாயம் செய்து வந்ததை பயன்படுத்தி அந்த சொத்து அவர்களுக்கு சொந்தமானது என பட்டா பெற்றுள்ளார்கள். அந்த நிலத்தை அவருடன் 3 பங்கு வைத்து குருசாமி, அவருடைய மனைவி வைரமணிக்கு 20.12.2011 ம் தேதிய தான செட்டில்மென்ட் ஆவணம் மூலமும், வைரமுத்து அவருடைய மனைவி மாரித்தாய் என்பவருக்கு 21.03.2012 ம் தேதிய தான செட்டில்மென்ட் ஆவணம் மூலமும் உரிமை மாற்றம் செய்துள்ளார்கள்.

3. அதற்கு பிறகு என்னுடைய சித்தப்பா வெளியூரிலிருந்து வந்த பிறகு கிராம நிர்வாக அலுவலரிடம் நில அடங்கல் தொடர்பான ஆவணங்களை வாங்கியபோது தான் மேற்படி விவரங்கள் தெரியவந்தது. 01.06.2013 ம் தேதி என்னுடைய சித்தப்பா ராமகிருஷ்ணன் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்தார். 27.06.2013 ம் தேதிய விசாரணைக்கு ஆஜராகுமாறு வட்டாட்சியர் வைரமணி மற்றும் வைரமுத்து ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பினார். அந்த அழைப்பாணையை அவர்கள் ஏற்காமல் அவர்கள் சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் சர்வே எண் 928/2 ல் உள்ள நிலம் அவர்களுக்கு சொந்தமானது என்றும், அவர்களுடைய அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்றும், அசல் வழக்கு எண்

109/2013 வழக்கு போட்டார்கள். அந்த வழக்கில் வந்த தீர்ப்பில் நிலம் ராமகிருஷ்ணனுக்கு சொந்தமானது என்றும், அனுபவம் மட்டும் மேற்படி குருசாமி, வைரமணி மற்றும் ராமரிடம் இருந்ததாக முடிவு செய்யப்பட்டது. மேற்படி 3 நபர்களின் அனுபவத்தை ராகிருஷ்ணன் மற்றும் அவருடைய வாரிசுதார்களும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

4. வைரமணி போலியாக தயாரிக்கப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தை வைத்து அவருடைய குழந்தைகள் வைரவசாமி, சுரேஷ், ஆதிலட்சுமி, உமாமகேஸ்வரி ஆகியோர் பெயருக்கு ஒரு தான செட்டில்மென்ட் ஆவணம் எழுதிகொடுத்துள்ளார். மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் மீண்டும் கிராம நிர்வாக அலுவலரிடம் பட்டாவை அவர்களது பெயருக்கு மாற்ற மனு செய்தார்கள். ஏற்கனவே நிலம் சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நடப்பதால் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று நாங்கள் ஆட்சேபனை கொடுத்தோம். மேலும், நான் 22.11.2019ம் தேதி சாத்தூர் தாலுகா காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல்நிலையத்தில் கொடுத்தது தான். (**<u>அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**). என்னிடம் காட்டப்படும் ஆவணம் 13.08.2019ம் தேதி வைரமணி அவருடைய குழந்தைகளுக்கு எழுதிக்கொடுக்க ஏற்பட ஆவணத்தின் நகல் ஆகும். (**<u>அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**). வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

5. என்னுடைய வயது தற்போது 60 என்றால் சரிதான், நான் தான் மேற்படி நிலத்தை 40 ஆண்டுகளாக பராமரித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1965 ஆம் ஆண்டு பிறந்தேன். எந்த காலத்திலும் மேற்படி நிலத்தை என்னை பார்த்துக் கொள்ளும்படி என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், நான் அந்த நிலத்தின் அனுபவத்தில் இருக்கவில்லை என்றாலும் சரியல்ல. யார் கூறி நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ராமகிருஷ்ணனின் மனைவி ஜெயலட்சுமி கூறி தாக்கல் செய்தேன். அவர் எங்கே வசித்து வருகிறார் என்றால் சாத்தூரில் தான் இருக்கிறார். எங்களுடைய ஊரில் மேற்படி ராமகிருஷ்ணனின் வாரிசுகள் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் பணி தொடர்பாக வெளியூரில் வசித்து வருகிறார்கள்.

6. ராமகிருஷ்ணனுக்கு எங்கு எல்லாம் சொத்துக்கள் இருக்கிறது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வீடுகள் இருக்கிறது என்றால் அவருக்கு இரண்டு வீடுகள் இருக்கிறது. அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஒரு வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை, மற்றொரு வீட்டில் ராமகிருஷ்ணனிடம் வேலை செய்யும் நபர்களுடைய இருக்கிறார்கள். ராமகிருஷ்ணன் மற்றும் அவருடைய குழந்தைகள் வந்து செல்லும்போது வசிப்பதற்காக அந்த வீட்டை பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ராமகிருஷ்ணனின் வாரிசுகள் யார் யார் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் சாந்தி என்பவர் இருக்கன்குடியில் ஆசிரியராகவும், கண்ணன் என்பவர் கோயமுத்தூரில் ஆசிரியராகவும், தினகரன் சென்னையில் காவல்துறை அதிகாரியாகவும், ராஜலட்சுமி பெங்களூரில் அவருடைய கணவருடனும், ராமகிருஷ்ணனின் இரண்டாவது மனைவி மகன் பாலமுருகன் அமெரிக்காவிலும் வசித்து வருகிறார்கள்.

7. இந்த வழக்கில் கூறப்படும் சொத்து எவ்வாறு ராமகிருஷ்ணனுக்கு

சொந்தமானது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராமகிருஷ்ணன் பெயரில் பட்டா இருந்தது என்பதை நான் பார்த்து உள்ளேன் என்றால் பார்த்து உள்ளேன், அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். ராமகிருஷ்ணனின் அப்பா பெயர் ராமசுப்பு நாயக்கர் ஆகும். ராமசுப்பு நாயக்கருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ராமகிருஷ்ணனும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. ராமசுப்பு நாயக்கருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்றால் சரிதான். அவர்களின் பெயர் ஜெயலட்சுமி மற்றும் மகாலட்சுமி ஆகும்.

8. வழக்கு பிரச்சனை உரிமையியல் தொடர்புடையது என்றாலும், எவ்விதமான குற்ற செயலையும் எதிரி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள அசல் வழக்கு எண் 109/2013 வழக்கில் வழக்கு சொத்து உரிமையாளர் ராமகிருஷ்ணன் என்றும், குருசாமி, வைரமுத்து மற்றும் ராமர் ஆகியோர்களுக்கு அனுபவம் மட்டும் இருந்தது என்றும் தீர்ப்பு வந்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் சொத்தில் உரிமை கோரி நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆகையால் இந்த வழக்கை என்னால் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. குருசாமி, வைரமுத்து ஆகியோர் எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பட்டா மற்றும் ஆவணங்களை ரத்து செய்ய தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது.

9. தற்போது வரை மேற்படி சொத்து எதிரி மற்றும் அவர்களின் குடும்பத்தார் பெயரில் இருந்து வருகிறது என்றாலும், பொய்யாக வளர்த்து தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ராமகிருஷ்ணனின் மகன்களில் ஒருவர் காவல்துறை அதிகாரி என்பதால் எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

4 Mar 2026 12:17

Judicial Magistrate 2, Sattur